5th March 1968]

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவரவர்களே, எனக்குக் கிடைத்த தகவல்படி 90 சதவிகித மாணவர்கள், "நாங்கள் தமிழ் படிக்க மாட்டோம் என்று சொல்லி, ஆங்கிலத்திற்குப் போகவேண்டுமென்று சொல்வது அரசிற்குத் தெரியுமா? மனுச் செய்தவர்களுக்குத் தமிழிலிருந்து வேறு பாடம் மாற்றிக் கொள்ள அரசு அனுமதி கொடுத்திருக்கிறதா? அவ்வாறு கொடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, சென்ற ஆண்டு தமிழில் புகுமுக வகுப்புகளுக்கு ஒதுக்கியது 7,600 இடங்கள். அதில் பாடம் எடுத்துக் கொண்ட 6,364 மாணவர்கள் தமிழை எடுத்துக்கொண்டார்கள். மீதியுள்ள 1,230 இடங்கள் நிரப்பப்படவில்லை.

திரு. என். ஆர். தியாகராஜன் : மற்ற பாடங்களுக்கு கிராக்கி இருக்கும் போது, இதிலே மட்டும் 1,230 இடங்கள் காலியாக இருக்கக் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : இதற்கு மாணவர்கள் வந்து சேர்ந்தால் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். சேர வரவில்லை. அது தான் அதற்குக் காரணம்.

Schools run without Government Grant.

*173 *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) whether anybody is running a school without receiving any grant from the Madras Government ;

(*b*) if so, the names of persons and the places wherein they run such schools ; and

(*c*) whether the Education Department has approved those schools ?

அரசாங்க நிதி உதவி பெறாத பள்ளிகள்

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழக சர்க்காரின் எவ்வித நிதி உதவியும் பெறாமல் யாராவது பள்ளிகள் நடத்துகிறார்களா ?

(இ) ஆமெனில், யார் யார் எங்கெங்கு அத்தகைய பள்ளிகள் நடத்துகிறார்கள் ?

(உ) அந்தப் பள்ளிகளுக்கு கல்வி இலாகா அங்கீகாரம் அளித்து இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) கண்கார்டியா பயிற்சிப்பள்ளி, ஆம்பூர், பிரசன்டேசன் கான்வென்ட் ஆங்கிலோ இந்திய உயர்நிலைப்பள்ளி, கோடைக்கானல்.

(உ) ஆம்.

Gandhi Statue

*174 *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Works to pleased to state—

(*a*) whether any representation has been received by the Madras Government to remove the existing Gandhi's Statue at Marina and to substitute another statue of Gandhi in its stead ; and

(*b*) if so, the action taken thereon ?